தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 13

2011 ஆகஸ்ட் 30, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு, வெறுப்பு இல்லாத கடவுளின் திருப்பாதங்களை இடைவிடாமல் வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் துன்பம் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 66, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

67—

வாசனை திரவியம்

***1558—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஆகஸ்ட் 30

(அ) காரைக்குடி தொகுதி, பெரியகோட்டை, சிறுகபட்டி பகுதியில் மல்லிகைப் பூவின்மூலம் வாசனைத் திரவியம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காரைக்குடி தொகுதி, பெரியகோட்டை, சிறுகபட்டி பகுதியில் மல்லிகைப் பூவின்மூலம் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அரசு சார்பில் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளையும் சாதனைகளாக்கி, சரித்திரம் படைத்திட்ட தலைவியே, ஆய்வு செய்து முடிவு செய்யும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை வையகத்தில் ஒளிரச்செய்த ஒளிவிளக்கே, வைகை ஆறு பெருக்கெடுத்தோடும் மதுரையை குடும்ப ஆறு கோலோச்சி வந்தது. அதுவே கொடுஞ்செயலாய் மாறியது. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் இல்லை என மயங்கிய நேரத்தில், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியாய் வந்த மதுரை மீனாட்சியை வணங்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய காற்றையும் விற்றுக் காசாக்கலாம் என்று நினைத்த கயவர்களை தேர்தல் களத்திலே தோற்கடித்து நீதியை நிலைநாட்டிய வெற்றிச் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

எங்களுடைய காரைக்குடி தொகுதியில், அந்த மண்ணிலே விளைகின்ற மல்லிகைப் பூ அதிக நறுமணம் கொண்டதாக இருக்கிறது. ஏழையெளிய விவசாய மக்கள் அதை அதிகமாகப் பயிரிட்டு வருகின்ற காரணத்தால், அங்கு விளைகின்ற அந்த மல்லிகைப் பூவிலிருந்து—நல்ல நறுமணம் தரும் அந்த மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் திரவியம் எடுப்பதற்கு அரசு ஒரு வாசனைத் திரவிய மையத்தினை அங்கே ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கின்றோம். காரணம், 8 முறை நாடாளுமன்ற வேட்பாளராகவும், 7 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த

2011 ஆகஸ்ட் 30]

ப. சிதம்பரம், அந்த மாவட்டத்தையே சீரழித்து வைத்திருக்கிறார். இன்றைக்கு பசும்பொன் சிவகங்கை மாவட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பட்டியலில் முதல் இடத்தைப் பெறுகின்ற அளவிற்கு அந்த வல்லவர் படைத்திருக்கின்றார். ஆகவே, எங்களுடைய காரைக்குடி தொகுதி என்பது 50 ஆண்டுக்காலம் காங்கிரசார் வசம் இருந்த தொகுதி. அந்தத் தொகுதியில் இதுபோன்ற சிறு சிறு தொழிற்சாலைகளைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், வாசனைத் திரவியம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான் கேள்வி. தொகுதி வரலாற்றையெல்லாம் கூறாதீர்கள். தயவு செய்து கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *ஆகவே, வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். அந்த மாவட்டத்தில் எந்தத் தொழிற்சாலையை மத்திய அமைச்சராக இருந்தவர் கொண்டுவரவில்லை என்று வருத்தத்தோடு கூறினார்கள். நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, சிறுதொழில்களுக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து பல்வேறு வகையிலே பயன்பெறக்கூடிய வகையிலே, அந்தந்தப் பகுதிகளுடைய நிலைமையைக் கருத்திலேகொண்டு, தொழில் முனைவோர்கள், தொழில் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சிவகங்கை மாவட்டத்தில், சுமார் 10 ஹெக்டேர் பரப்பளவில் மல்லிகைப் பூ பயிரிடப்படுகிறது. குறிப்பாக, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட பெரியகோட்டை, சிறுகபட்டி பகுதியில் சுமார் 4 ஹெக்டேர் பரப்பளவில் மல்லிகைப் பூ பயிரிடப்படுகிறது. ஒரு ஹெக்டேர் பரப்பளவில் சுமார் 6 டன் மல்லிகைப் பூ கிடைக்கிறது. இப்பகுதியில் விளைவிக்கப்படும் மல்லிகைப் பூ பொதுவாக அன்றாடப்

பயன்பாட்டிற்கே உபயோகப்படுத்தப்படுகிறது. இம்மாவட்டத்தில் மல்லிகைப் பூ அதிக விளைச்சல் இல்லாத காரணத்தால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து மல்லிகைப் பூ அன்றாடத் தேவைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. வாசனைத் திரவியம் தயாரிக்க சுமார் 8 டன் மல்லிகைப் பூ மற்றும் இதர வாசனைப் பொருட்கள் தேவைப்படுகிறது. வாசனைத் திரவியம் தயாரிக்க, மல்லிகைப் பூ மற்றும் இதர மூலப்பொருட்கள் அதிக அளவில் கிடைக்காத காரணத்தால் வாசனைத் திரவியம் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனங்கள் எதுவும் இம்மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, காரைக்குடி தொகுதி, பெரியகோட்டை, சிறுகபட்டி பகுதியில் மல்லிகைப் பூவின்மூலம் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அரசின் சார்பில் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே மல்லிகைப் பூ குறைவான பகுதியிலே விளைச்சல் செய்வதாகக் கூறினார்கள். அங்கே அதிக அளவில் மல்லிகைப் பூ பயிரிடப்படுகிறது. ஆகவே, அரசு ஆவன செய்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அருள்கூர்ந்து, எங்கள் தொகுதிக்கு மல்லிகைப் பூ வாசனைத் திரவியத் தொழிற்சாலை கொண்டு வருவதற்கு ஆய்வு செய்து, எங்களுக்கு அமைத்து தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப, தனியார் எவரேனும், அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து, மல்லிகைப் பூ கொள்முதல் செய்து, வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழில் துவங்க முன்வந்தால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை, 2008–ன்படி முதலீட்டு*

மானியம், தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மதிப்பில் 15 சதவீதம், 3 ஆண்டுகளுக்கு குறைந்த அழுத்த மின் மானியம் 20 சதவீதம் வரை உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படும்.

மேலும், தொழில் துவங்க விரும்பும் தொழில் முனைவோர்களுக்கு பாரதப் பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாய் வரை மானியத்துடன் கடன் உதவி, அதாவது தொழிலக அமைவிடத்தைப் பொறுத்து அதிகபட்சமாக 35 சதவீதம் வரை மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை, 15 சதவீதம் மானியத்துடன் கடன் உதவியும் பெற்றுத் தர சிவகங்கை மாவட்ட தொழில் மையம் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மதுரையில் உள்ள இரண்டு இடங்களில் அந்த மானியத்தோடு தனியார் தொழில் தொடங்கி செய்கிறார்கள். அதுபோல, தனியார் முன்வருவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அப்பகுதியிலே வெளி மாவட்டங்களிலே இருந்துகூட மல்லிகைப் பூவை வரவழைத்து, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு உரிய உதவிகள் செய்யும் என்பதைத் தங்கள் மூலமாகக் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் பாம்ரோஸ் என்னும் புல், வாசனைத் திரவியம் எடுக்கப் பயன்படும் புல். அது தருமபுரி மாவட்டத்திலே மழைக் காலமாக இருந்தாலும் சரி, மழை இல்லாத காலமாக இருந்தாலும் சரி, நிறைய விளைகிறது. பல ஆயிரம் ஏக்கரில் இங்கு விளைந்து கொண்டிருக்கிறது. வாசனைத் திரவியம் எடுத்து ஆயிலாக எடுக்கிறார்கள். அந்த ஆயில் வெளிநாடுகளுக்கு, எல்லா இடங்களுக்கும் போய்க்கொண்டிருக்கிறது. அந்த வாசனை திரவியத்தை சரியான விலை கொடுத்து இங்கு வாங்குவது இல்லை. தருமபுரி மாவட்டத்தில், நிறைய ஆயில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சரியான விலை கொடுத்து எடுக்காத காரணத்தினால் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த வாசனைத் திரவியம் எடுப்பதற்கு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை தங்களின் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தைலப் புல் என்று நினைக்கிறேன். அது வாசனை திரவியம் எடுக்கப் பயன்படுகிறது. அந்த தைலப் புல்லானது மலைப் பகுதியிலே அதிகமாக விளைகிறது. என்னுடைய மடத்துக்குளம் தொகுதியில்கூட மலைவாழ் மக்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக சலுகைகள் கொடுக்கப்பட்டு, அங்கு இயந்திரங்கள் பெற்றுத் தரப்பட்டு, அந்த தைலப் புல் மூலமாக, ஆயிலைத் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். அதைப்போலத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் இடமும் இருக்குமென்று நினைக்கிறேன். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, திட்ட அலுவலர் மூலமாக, அந்தச் சலுகைகளைப் பெற்றுத் தருவதற்கு அரசு மூலமாக உரிய ஏற்பாடுகள் செய்து, வாசனைத் தைலம் தயாரிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்ய அரசு முனைப்புடன் செயல்படும் என்பதை அன்போடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியில், குறிப்பாக சாத்தூர் ஒன்றியத்தில், முத்தார்பட்டியில் நிரம்ப மல்லிகைப் பூ விளைகிறது. இந்த மல்லிகைப் பூவை ஆங்காங்கே கொண்டுபோய் விற்பனை செய்யக்கூடிய ஒரு சூழல் நிலவுகிறது. ஆகவே, மல்லிகைப் பூவை வைத்து வாசனைத் திரவியம் தயார் செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருப்புக்கோட்டையிலே மல்லிகைப் பூ அதிகம் விளைகிறது என்று கூறினார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலே மல்லிகைப் பூ மற்றும் பல்வேறு பூக்கள் விளைகின்றன. அந்த இடங்களிலே உற்பத்தி

செய்யக்கூடிய அந்தப் பூவானது பொதுமக்கள் பயன்பாட்டுக்குப்போக மீதியிருக்கக்கூடிய பூக்களைத்தான் அதுபோன்ற Scent factory போன்றவற்றிற்குப் பயன்படுத்த முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, மதுரை பகுதியில் இதுபோல தனியார் துறையில் இரண்டொரு கம்பெனிகள் எடுத்துச் செய்கிறார்கள். அரசு மூலமாக 15 சதவிகித மானியம், அதேபோல 20 சதவிகிதம் மின்சாரச் சலுகைகள் போன்றவற்றைப் பெற்றுப் பயன் அடைகிறார்கள். அதுபோல அங்கு தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு அரசு மூலமாக, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மூலமாக உரிய வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்பாடு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது வட்டிகூட 3 சதவிகிதம் குறைத்துக் கொடுப்பதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதுபோல, அந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் செய்ய தொழில் முனைவோர்கள் முன் வந்தால் அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து முக்கனியின் சுவை போல் தமிழகத்திற்கு ஆட்சியின் நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டு வருகிறார்கள். மல்லிகைப் பூ என்றாலே மதுரை மல்லிதான், மிகவும் வாசனை தரக்கூடியது, மிகவும் புகழ்பெற்றது அந்த மல்லி. மல்லிகைப் பூ மூலமாக தனியார் சென்ட் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மல்லிகைப் பூ உற்பத்தி செய்பவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, வாசனை திரவியத் தொழிற்சாலையை மதுரை சிட்கோ பகுதியிலே அரசின் சார்பிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 30

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அன்புச் சகோதரர் முத்துராமலிங்கம் அவர்கள் கூறும்பொழுது, மதுரையிலே விளைகின்ற மல்லிகைப் பூ அதிகமான வாசனையுள்ளது என்று கூறினார்கள். எல்லா இடங்களிலும் மல்லிகைப் பூ வாசனையாகத்தான் இருக்கும். மதுரை மல்லிகை மட்டும்தான் வாசனைமிக்கது என்பதல்ல. இருந்தாலும், அவருடைய கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய வகையிலே அவருடைய மாவட்டத்திலேயே தனியார்கள் முன் வந்து—மல்லிகைப் பூ வருடம் முழுவதும் விளையாது, உற்பத்தி ஆகாது. சில மாதங்களில் அந்தப் பூ வெடிக்காது. அந்தத் தருணத்தில் தனியார் மூலமாக இயங்குகின்ற அந்தத் தொழிற்சாலைகள்கூட அதன் முழு உற்பத்தியை அடைய முடியாத ஒரு சூழ்நிலை. இருந்தாலும் ஒரு 30 இலட்சம், 40 இலட்சம் டன் கொள்முதல் செய்து அந்த, factory—ஐ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, அதிகமான தொழில் முனைவோர்களை, வசதி படைத்தவர்களை அழைத்து, அரசினுடைய சலுகைகளை வழங்கி இன்னும் ஏதாவது அருகிலுள்ள மாவட்டங்களில் இருக்கும் மல்லிகைப் பூவைக்கூட வரவழைத்து, அதிக வாசனையுள்ள அந்த மல்லிகைப் பூவைக்கொண்டு, தொழிற்சாலை தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எந்த நேரத்திலும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை அன்போடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில், குறிப்பாக மதுரையை மையமாக வைத்து, எண்ணற்ற பகுதிகளிலே மல்லிகை அதிகமாக விளைகிறது. கடந்த காலங்களிலே மதுரையிலிருந்து மும்பைக்கு விமானத்தின் வாயிலாக மல்லிகைப் பூவை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பிருந்த காரணத்தினாலே விவசாயிகளுக்கு அதிக விலை கிடைத்து வந்தது. ஆனால் காலையிலும், மாலையிலும் இயக்கப்பட்ட விமானங்கள் இப்போது நிறுத்தப்பட்ட காரணத்தால் விவசாயிகளால் பிற பகுதிகளுக்கு அந்த மல்லிகைப் பூவை அனுப்பிவைக்க முடியவில்லை. அதன் காரணமாக, ஒரு நேரத்திலே 100 ரூபாய்க்கும் சில நேரங்களிலே 1,500 ரூபாய்க்கும் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையில், மத்திய அரசின் வாயிலாக மதுரையிலிருந்து காலையிலும்,

2011 ஆகஸ்ட் 30]

மாலையிலும் விமானங்களை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்கள் கூறும்போது, மல்லிகைப் பூ ஏற்றுமதி செய்யப்படுமா என்று கேட்டார்கள். மல்லிகைப் பூ மட்டுமல்ல; எல்லாப் பூக்களுமே; சில பூக்கள் கோவையிலேயிருந்து; ஊட்டியில் விளையக்கூடிய பூக்கள்கூட விமானங்கள் மூலமாக பெங்களூரு போன்ற மாநகரங்களுக்குச் செல்கின்றன. இதே மல்லிகைப் பூ அந்தப் பகுதியின் தேவைக்குப் போக மீதமாக இருக்குமேயானால் அவற்றைச் சேமித்து வைப்பதற்கு அரசு மூலமாக குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்கும் தனியார் முன்வந்தால், அந்தக் குளிரூட்டு நிலையங்களில்கூட அந்த மல்லிகைப் பூக்களைச் சேமித்து வைத்து, அதன் தேவையை அனுசரித்து, அந்த விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையிலேகூட, இருப்பு வைத்து, நல்ல விலை வரும்போது விற்கலாம்; விலை ஏறுவது, இறங்குவது மார்க்கெட்டினுடைய நிலைமை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, மல்லிகைப் பூவை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி, அதன்மூலம் உரிய விலை கிடைப்பதற்கு அரசு மூலமாக உரிய உதவிகள் செய்வோம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள். மல்லிகைப் பூ வாசனை மாதிரி வினா நீண்டுகொண்டு போகிறது. விரைவில் பேசி முடியுங்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலர் உற்பத்திக்கு பிரத்யேகமான தட்பவெப்ப நிலை இருக்கிற கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஏராளமான மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கிருந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தருமபுரி பகுதியில் பெண்ணாகரம், பாப்பாரப்பட்டி பகுதிகளிலும்,*

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியிலும் பிரத்யேகமாக மல்லிகைப் பூ உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து* Assembly *ஆரம்பித்ததிலிருந்து மல்லிகைப் பூ வாசனை வேகமாக அடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற பகுதிகளில் மலர் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன; அந்த மலர்களுக்கு உரிய விலை கிடைக்கக்கூடிய வகையிலே சென்ட் தொழிற்சாலை அமைத்தால் சௌகரியமாக இருக்கும் என்று கூறினார்கள். ஏற்கெனவே தருமபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளிலே,* Green Park *மூலமாக மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இருப்பினும், இந்த மல்லிகைப் பூவைப்போன்று மற்ற வாசனைப் பூக்களையும் உற்பத்தி செய்து அவற்றைக்கொண்டு தொழிற்சாலையின் மூலமாக வாசனைத் திரவியம் தயாரிப்பதாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியிலிருந்து — தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற பின்தங்கிய மாவட்டங்கள், இப்போது நல்ல நிலையிலே, முன்னேற்றம் அடைந்துள்ள மாவட்டங்களாக மாறியுள்ளன — தொழில் முனைவோர்கள் முன்வந்தால், அரசு மூலமாக உரிய சலுகைகளைக் கொடுத்து, உரிய ஏற்பாடுகள் செய்துதரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*